முருகப்பெருமான் துணை

**மகான் சனீஸ்வர பகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.09.2022**, வெள்ளிக்கிழமை

1. வானவர்கள் போற்றும் தருமமாக
வள்ளலாக வாரி வழங்குகின்ற
ஞானதேசிகனே ஆறுமுகஅரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது வேங்கை திங்கள்
குறைவிலா முப்பானோர் திகதி புகர்வாரம்
**(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 31 நாள், 16.09.2022 வெள்ளிக்கிழமை)**
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகன் கேட்க சனீஸ்வர பகவானும்
3. பகவானும் உலகநலமுற உரைப்பேன்
பண்புடன் மக்கள் ஞானம்பெற வேண்டி
மிகைபட வரமாக இதுநாள் அருள்வேன்
முருகப்பெருமான் அவதார சக்தியான
4. சக்தியான அரங்கமகான் தனை
சரணடைவு கண்ட மக்களுக்கு
சக்திமிகு காரி கால இடர்களும்
சாற்றிடுவேன் இலகுவாகி அகலும்
5. அகலும் ஆபத்து ஆயுத கண்டமிலா
ஆயுள்காப்பு மிகுதி ஆகும்
மகான்வழி அன்னதான சேவையில்
மனமுவந்து எவர் பொருளுதவி
6. உதவிசெய்து தருமம் காக்கின்றாரோ
உலகினில் அவர்கட்கு இனி
பதவி சுகம் புகழ்பாதுகாப்பு
பணிதிடம் தேட்டு தன வளமென
7. வளமென சகல தேற்றமும்
வகை வகையாய் கண்டுதேறுவர்
பலமான அரங்கன் உபதேசமே
பாதுகாப்புத் தரும் வேதமென
8. வேதமென எவர் எல்லாம் ஏற்று
விடாது வணங்கி பின்பற்றி
வேத ஆகமமாக கடைப்பிடித்து
விளம்பிட மற்றவரும் அறிய
9. அறியவகை செய்கின்றாரோ
அவர்கட்கெல்லாம் உலகிலினி
அறியாமை விலகி ஞானம் கூடி
ஆன்ம பலமுடன் இனிபிறவாத வண்ணம்

10. வண்ணமுடன் உயர்வு நிலை
வள்ளல் அரங்கனால் கிட்டும்
எண்ணம் தூய்மை ஆகி
எக்காலமும் குருவருள் துணைபட

11. துணைபட காலம் கடத்தி
தூயஞான சேவை ஆற்றி
இணையிலா ஞானியே ஆகுவர்
இயம்பிய அருளாசி முற்றே

–சுபம்–